டின் மீது தாக்குதல் நடத்த முடிவு செய்திருப்பது பற்றிய தகவல் கிடைத்துள்ள நிலையில் பயங்கரவாதிகளின் தாக் குதல் அபாயம் மிகவும் கவலைக்குரியதாக இருப்பதாக அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்கொலை தாக்குதல் நடத்த பயிற்சி பெறும் பெண்கள் விரைவில் ஐரோப்பா நாடுகளில் உள்ள அல்-ஹைடா ஆதரவாளர்களின் வீடுகளுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும், இவர்கள் விமானம், பேருந்து, தொடருந்து போன்ற மக்கள் பிரயாணம் செய்யும் வாகனங்கள் மற்றும் பொது மக்கள் அதிகளவில் கூடும் விளையாட்டு திடல்கள், மின்சார நிலை யங்கள், துறைமுகங்கள் ஆகியவற்றில் தற்கொலை தாக்கு தல் நடத்துவார்கள் என்று அஞ்சப்படுகிறது. தங்கள் நாட் டுக்குள் நுழைய இருக்கும் பெண் தீவிரவாதிகள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்கும்படி அதிகாரிகளை பிரித்தானிய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

*வடகொரியா*

## தென் கொரியாவின் கருத்து தொடர்பில் கடும் அதிருப்தி

அணுவாயுத நிலை மீது தாக்குதல் நடத்தப் போவதாக தென் கொரியா விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் வட கொரியா கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது. வடகொரி யாவின் நொங்யாங் அணு ஆலை மீது தாக்குதல் நடத்தப் போவதாக தென் கொரியா அறிவித்துள்ளது. வடகொரிய அணு ஆலை மீது தாக்குதல் நடத்த நேரிடும் என தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர் அண்மையில் கருத்து வெளி யிட்டிருந்தார்.

இவ்வாறான அறிவிப்பு யுத்தப் பிரகடனமாக கருதப்பட வேண்டுமென வடகொரிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இவ்வாறான அறிவிப்புக்களுக்கு அஞ்சப் போவதில்லை எனவும், தகுந்த பதிலடி கொடுக்கப்படும் எனவும் வட கொரியா அறிவித்துள்ளது. அணுவாயுத விவகாரம் தொடர் பான ஆறு தரப்பு பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந் ததனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டது. வடகொரியாவிற்கும் தென் கொரியாவிற்கும் இடையில் எந்த நேரத்திலும் யுத்தம் மூழக் கூடிய அபாயம் காணப்படுவதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும் தென் கொரியாவுடன் பேச்சுக் களுக்கு தாங்கள் தயாராகவே இருப்பதாக வடகொரியா கூறிவருகின்றது.

இதற்கிடையே, இந்தியாவிற்கு அணு உலைகளை அமைத்துக் கொடுப்பதற்கு தாங்கள் தயார் என தென் கொரியா கூறியுள்ளது. கடந்த திங்களன்று டில்லிக்கு சென்



றிருந்த தென் கொரிய அதிபர் லீ மியங்க் பாக், பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்பின்போது இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார். தென்கொரியா ஏற்கனவே சுமார் 20.4 பில்லியன் டொலர்கள் பெறுமதியான அணுஉலை அமைக்கும் உடன்படிக்கையை ஐக்கிய அரபு எமிரேட்சுடன் செய்துகொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

*ஈராக்*

## கெமிக்கல் அலிக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

ஈராக் முன்னாள் அதிபரும் தூக்கிலிட்டப்பட்டவருமான சதாம் உசைனின் ஒன்று விட்ட சகோதரரான கெமிக்கல் அலி எனப்படும் அலி ஹசன் அல் மஜீத் கடந்த திங்களன்று தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார். ஈராக் நீதிமன்றம் அண்மை யில் அவருக்கு தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. இதையடுத்து கெமிக்கல் அலி தூக்கிலிடப்பட்டதாக ஈராக்



அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சதாம் உசேன் ஆட்சிக்காலத்தின்போது 1988ம் ஆண்டு ஹல்பஜா கிராமத்தில் வசித்து வந்த குர்து இன மக்களை விமானம் மூலம் விச வாயுவைத் தெளித்துக் ஆயிரக்கணக் கானோரைக் கொன்று குவித்தவர் கெமிக்கல் அலி என்று குற்றம் சாட்டப்பட்டது. இதேபோல குர்து இன மக்களுக்கு எதிரான பல்வேறு படுகொலைகளின் பேரிலும் கெமிக்கல் அலி மீது வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகளில் அவருக்கு மொத்தம் ஐந்து தூக்குத் தண்டனைகள் விதிக்கப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

கெமிக்கல் அலி தூக்கிலிடப்பட்ட செய்தி வெளியான தையடுத்து பாக்தாத்தில் வன்முறை வெடித்தன. பல இடங் களிலும் குண்டுவெடிப்புகள் இடம்பெற்று 50 பேருக்கும் மேல் பலியானார்கள்.

*பாகிஸ்தான்*

## ஆளில்லாத விமானங்களை அமெரிக்கா வழங்குகிறது

பாகிஸ்தானில் உள்ள அல்-ஹைடா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் மீது ஆளில்லாத விமானங்கள் மூலம் அமெ ரிக்கா ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. தாங்களே இத்தகைய தாக்குதல் நடத்தும் வகையில், தங்களுக்கு



ஆளில்லாத தாக்குதல் போர் விமானங்களைத் தருமாறு அமெரிக்காவிடம் பாகிஸ்தான் பலமுறை கோரி வந்தது. இந்நிலையில், பாகிஸ்தான் சென்றிருந்த அமெரிக்க பாது காப்பு அமைச்சர் ரொபர்ட் கேட்ஸ், பாகிஸ்தானுக்கு ஆளில் லாத 12 உளவு விமானங்கள் மட்டும் வழங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளார். இவை அமெரிக்கா பயன்படுத்தும் விமா னங்களை விட சிறியவை. குறைந்த உயரத்திலேயே பறக்கும். இவற்றில் ஏவுகணைகளை எடுத்துச் செல்ல முடியாது. பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை கைப்பற்றும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை என்றும் ரொபர்ட் கேட்ஸ் கூறினார்.

இதற்கிடையே, பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் மீரான்ஷா நகர் அருகே உள்ள கும் சரோபி என்ற இடத்தில் தலிபான்கள் 7 பேரை சுட்டுக்கொன்றுள் ளனர். இந்த 7 பேரும் அமெரிக்காவுக்கு உளவு பார்த்ததாக குற்றம்சாட்டி சுட்டுக்கொன்றுள்ளனர். இந்த உடல்களின் அருகில் அமெரிக்க உளவாளிகள் என்று எழுதப்பட்ட பாதகைகளும் வைக்கப்பட்டிருந்தன.

*சீனா*

## மாணவர் தலைவருக்கு 9 ஆண்டு சிறை

சீனாவின் முன்னாள் மாணவர் தலைவர் ஷியூ யோன் ஜுன் என்பவருக்கு 9 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங் கப்பட்டுள்ளது. இவர் 1989ம் ஆண்டு பெய்ஜிங் நகரில் சீன அரசுக்கு எதிராக தியானமென் சதுக்கத்தில் ஜனநாயகம் கோரி போராட்டம் நடத்தியவர். கடந்த ஆண்டு (2009) செப்டம்பர் மாதம் இவர் ஹொங்கொங் சென்றிருந்தபோது, போலி பெயரில் சென்றதாகக் கூறி கைது செய்யப்பட்டார். இதற்காக அவருக்கு 80 ஆயிரம் யுவான் அபராதம் விதிக் கப்பட்டது.

இந்த நிலையில் ஹொங் கொங் அரசு அதிகாரிகள் அவரை சீனாவின் ஷென்சென் நகரில் உள்ள காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர். பின்னர் அவர் நீதிமன்றில்




நிறுத்தப்பட்டபோது, அவருக்கு 9 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இது சீன அரசின் பழி வாங்கும் நடவடிக் கையெனக் குற்றம்சாட்டப்படுகின்றது. தியானமென் சதுக்கத் தில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தை கருத்தில் கொண்டு அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என அவரது ஆதரவாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

*ரஷ்யா*

## கருக்கலைப்பைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை

ரஷ்யாவில் கருக் கலைப்பு வீதத்தைக் குறைக்க அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அந்நாட்டின் சுகாதார அமைச்சர் தட்சனா கொலிகொவா தெரிவித்தார். ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வரும் பிறப்பு வீதத்தை அதிகரித்து, மக்கள் தொகையை வளர்ச்சியடையச் செய்ய



அவசரமான நடவடிக் கைகள் தேவைப்படுவதா கவும், 1991ம் ஆண்டு சோவியத் ஒன்றியம் வீழ்ச் சியடைய முன்னர் இருந்த கருக்கலைப்புத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அமைச் சர் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டம் நூறு வீதம் பயனளிக்காது போனா லும், முப்பது வீதமாவது பயனளிக்கும் வகையில் கருக் கலைப்பு தொடர் பான சட்டத்தைக் கடுமை யாகக் கட்டுப்படுத்த வேண்டுமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. 2009ம் ஆண்டு 1.7 மில்லியன் பிறப்பு இடம்பெற்றுள் ளது. ஆனால், 1.2 மில்லியன் பேர் கருக்கலைப்பு செய்துள் ளனர். கருக் கலைப்பு வீதம் அதிகமாக உள்ள நாடுகளில் ரஷ்யா முன்னிலையிலுள்ளது. பெற்றோருக்குப் பரிசு வழங் கல். குழந்தை பராமரிப்புச் செலவுகளை வழங்கல் போன்ற திட்டங்களினூடாக கருக்கலைப்பு வீதத்தைக் குறைக்கலாம் எனக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. 1995ம் ஆண்டு இத் திட்டம் ஓரளவு வெற்றியளித்ததாக ரஷ்யாவின் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

*சூடான்*

## அதிபர் மீது பாதணி வீச்சு

சூடான் நாட்டின் அதிபர் ஓமர் உசேன் அல் பஷீர் தலைநகரில் ஒரு விழாவில் கலந்து கொண்டபோது மேடைக்கு அருகே உட்கார்ந்து இருந்த ஒருவர் திடீர் என்று எழுந்து அதிபரை நோக்கி பாதணியை வீசினார். எனினும், அது குறி தவறி கீழே விழுந்தது. இதை தொடர்ந்து அதிபரின் பாது காவலர்கள் அவர் மீது பாய்ந்து அவரை கைது செய்தனர். அவர் எதற்காக அதிபர் மீது பாதணி வீசினார் என்பது தெரியவில்லை. அவர் பெயர் முதலிய விவரங்களும் தெரிய வில்லை. அவர் நன்றாக உடை அணிந்து இருந்தார். அவ ருக்கு சுமார் 50 வயது இருக்கும் என்று நேரில் பார்த்தவர்கள் கூறினார்கள். அவரை பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்த போது, எதிர்ப்புக் காட்டாது அமைதியாக இருந்துள்ளார். இராணுவ தளபதியாக இருந்த பஷீர் இரத்தம் சிந்தாமல் புரட்சி செய்து 1989ம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றினார். அவர் இந்த மாதம் தான் இராணுவத் தளபதி பதவியை இராஜி னாமா செய்தார். 24 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக தேர்தல் வருகிற ஏப்ரல் மாதம் நடக்க இருக்கிறது.